# எல்லாம் வல்ல தேவனைப் பற்றி வேதாகமப்படி உங்கள் குழந்தைகளுக்குப் போதிக்கவும்

*புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிப்போருக்கான* **A0f,** ப.தீ. பாடத்தை
**இதுவரை நீங்கள் படிக்கவில்லை என்றால் உடனே படிக்கவும்.**

**ஜெபம்:** "அன்பான கர்த்தரே! யோசுவாவைப் போல குழந்தைகள் உமக்குக் கீழ்ப்படியுமாறு போதிக்க பெற்றோர்களுக்கு உதவி செய்யும்."


தற்போதைய தேவைக்கும் அந்தந்தப் பகுதி பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாட்டை தெரிந்து கொள்க.

## 1. உங்கள் குழந்தைகளுக்கு போதிப்பதற்காக உங்கள் இருதயத்தை ஜெபத்தாலும் கர்த்தருடைய வார்த்தையாலும் ஆயத்தப்படுத்துங்கள்.

**பின்னணி:** எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து தமது மக்களை தேவன் மீட்ட பிறகு, அவர் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்த பூமியில் நுழையாமல் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அங்கு வாழ்ந்த பொல்லாத விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கு அவர்கள் அஞ்சினார்கள். அவர்களது அவிசுவாசத்தின் காரணமாக பரிசுத்தமானவர் அவர்களைப் பாலைவனத்தில் நாற்பது வருடமாக அலைய விட்டார். அவர்கள் பின்னர் யோர்தான் நதியைக் கடந்த போது அது ஒரு பெரிய சரித்திர சம்பவமாக மாறிற்று; ஏனெனில் கடைசியாக தேவ மக்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நிலத்துக்குள் நுழையும் விசுவாசத்தையும் தைரியத்தையும் பெற்றார்கள்.

யோசுவா 3:14-4:6

- யோர்தான் நதிக் கரையில் கற்களைக் குவிக்குமாறு தேவன் ஏன் தமது மக்களிடம் கூறினார்? *(பதில்: யோசுவா 4:6-7. பஸ்கா விருந்தைப் போல, கற்கள், தேவன் செய்த பெரிய காரியங்களை நினைப்பூட்டுவனவாக இருந்தன. யாத். 12:26-27 ஐ ஒப்பிடுக)*
- முதன் முதலாக யோர்தான் நதியில் இறங்கிய இஸ்ரவேலர்கள் யார் யார்? அதன் முக்கியத்துவம் என்ன? *(பதில்: யோசுவா 3:14. உடன்படிக்கை பெட்டியை சுமந்த லேவியர்கள் முதன் முதலில் இறங்கினர். இதன் மூலம் தேவன் தம் பிரசன்னத்தை வெளிப்படுத்தினார். அவர் அவர்களுக்கு முன் சென்றதை காட்டினார். தமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நிலமாகிய பரலோகத்துக்குள் நமக்கு வழியை செவ்வைப்படுத்தி இயேசு நமக்கு முன் செல்வது போலாகும் இது).*
- உடன்படிக்கை பெட்டியை ஏந்திச் சென்ற லேவியர்கள் நதிக்குள் இறங்கியதும் என்ன நடந்தது? *(யோசுவா 3:15).*
- அந்த 12 தலைவர்களும் நதியின் மத்தியில் இருந்து என்ன எடுத்தனர்? *(யோசு. 4:3).*
- நதியில் இருந்து எடுத்த கற்களை தலைவர்கள் எங்கு போட்டனர்? *(யோசு. 4:8).*



**பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ போதனைகளையும் கட்டுப்பாட்டையும் கொடுக்கவும்**

- பிள்ளைகளின் தந்தையே பெரும்பாலான பயிற்சியைத் தர வேண்டும் (எபே. 6:4).
- தினசரி வேதாகம தியானம், ஜெபம் ஆகியவற்றைப் பிள்ளைகளுடன் கடைபிடிக்கவும் (உபா. 6 & 7)

- தலைமுறை தோறும், தேவ வார்த்தையைப் பிள்ளைகளுக்கு கூறிவரவும். (சங். 78:3-7).
- தேவ வார்த்தை மூலமாக நேரடியாக பிள்ளைகளுக்கு போதிக்கவும் (உபா. 31:12) வேத கதைகளை அவர்களுக்குக் கூறவும்.
- **சிறு குழந்தைகள்** நடிக்கட்டும். நோவாவின் கதையைக் கூற அவர்கள் விலங்குகளைப் போல நடிக்கலாம். முயல் துள்ளுவது, சிங்கம் உறுமுவது.
- **சிறிய பிள்ளைகள்** சிறிது நேரத்துக்கே கவனித்து கேட்பார்கள். எனவே பெரிய கதைகளை கேட்குமாறு அவர்களை வற்புறுத்த வேண்டாம்.
- **பெரிய பிள்ளைகள்** சிறுவர்களுக்கு போதிக்கட்டும். ஒரே வயதுடைய குழந்தைகளை ஒரே குழுவில் சேர்ப்பதை எப்போதும் தவிர்க்க வேண்டும்.
- **பெரிய பிள்ளைகள்** கற்பனை மூலம் விஷயங்களை உருவாக்கியும், வேத கதைகளை நடித்தும், விளையாட்டுகளை உருவாக்கி பங்கேற்றும் ஈடுபடலாம்.
- முக்கியமான விஷயங்களுக்காக ஜெபிக்க பிள்ளைகளும், பெரியவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் (எஸ்ரா 10:1; 2 நாளா 20:12-13.)
- பரிசுத்த பண்டிகைகளிலும் கொண்டாட்டங்களிலும் பிள்ளைகள் பெரியவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம். நெகே. 12:43.
- முக்கிய ஆராதனையின் போது, பிள்ளைகள் பெரியவர்களுடன் சேர்ந்து துதிக்கட்டும். சங். 148:13-13; மத். 21:15-16.
- இயேசுவின் போதனைகளைக் கேட்க பிள்ளைகள் பெரியவர்களோடு சேர்ந்து கொள்ளட்டும், மத். 14:21.
- பிள்ளைகள் மோசமாக நடிக்கும் போது கோபப்படாமல் அன்பால் திருத்தவும், நீதி. 23:13; எபி. 12:6-11.
- பிள்ளைகளை கோபப்படுத்துவதை தவிர்க்கவும். வெறுக்கும் பெற்றோர் அல்லது பிள்ளைகள் சாபத்தைக் கொண்டு வருவார்கள் எபே. 6:1-4; மல். 4:6.
- கள்ளமற்ற பிள்ளைகள் மோசமான விஷயங்களை செய்வதற்கு காரணமாக வேண்டாம் மத்.18:1-6.
- இயேசுவின் அன்பையும், மன்னிப்பையும் பிள்ளைகளுக்கு உறுதிப்படுத்தவும். மாற்கு 10:13-16.
- உங்கள் குழந்தைகளை திருத்தினால் மட்டுமே கண்காணிக்கும் மூப்பராக செயல்பட முடியும், 1 தீமோ 3:4-5.

**2. இந்த வாரத்திற்கான செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

- வீடுகளில் பெற்றோர் தங்கள் பிள்ளைக்கு எவ்வாறு போதிக்க வேண்டும் என்பதை சந்தித்து எடுத்துக் கூறவும்.
- பகுதி I ல் பட்டியல் இடப்பட்டுள்ள வழிகாட்டுதலை உபயோகித்து பிள்ளைகளுக்கு போதிப்பவர்களுக்கு அறிவுரைகள் கூறவும்.
- விரும்பும் நடவடிக்கைகளில் பங்கேற்குமாறு கிறிஸ்தவர்கள் அல்லாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்புமாறு அழைக்கலாம்.

**3. வரும் ஆராதனை வேளைக்கான காரியங்களுக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசனை செய்யவும்**

தேவன், யோர்தான் நதிக்கரையில் கற்களைக் குவிக்குமாறு ஏன் தமது ஜனங்களுக்கு கட்டளை இட்டார் என்பதை **விளக்கவும்** (பகுதி I பார்க்க).

பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ உபதேசங்களையும் கட்டுப்பாட்டையும் எவ்வாறு கொடுக்கலாம் என்பதை **விளக்குக.** (பகுதி I பார்க்க).

யோர்தானைக் கடக்கும் கதையின் பகுதிகளை **நாடகமாக்கவும்.** உதவி செய்யுமாறு பிள்ளைகளைக் கேட்கவும்.

- **கதை கூறுபவர், யோசுவா, கல் சுமப்போர்** ஆகிய பாத்திரங்களை பெரியவர்கள் ஏற்கலாம். நடிக்கும் இடத்தின் மையப் பகுதியில் பெரிய கற்களை கல் சுமப்போர் ஆயத்தமாக வைத்திருக்கவும்.
- **இஸ்ரவேலர்கள், நான்கு ஆசாரியர்கள்** (ஒரு பெரிய பெட்டியை வைத்திருக்கலாம் அல்லது வைத்திருப்பது போல நடிக்கலாம்) ஆகிய வேடங்களை சிறுவர்கள் நடிக்கலாம்.

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (யோசுவா 3:14-17). பின் கூறுவது, "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியில் நுழைவதற்கு ஆயத்தமாய் இருந்த இஸ்ரவேல் மக்களிடம் யோசுவா கூறுவதைக் கேளுங்கள்)."

**யோசுவா:** "நாம் யோர்தான் நதியைக் கடப்போம். அது பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆனால் தேவன் காய்ந்த நிலம் வழியாக அதைக் கடக்கச் செய்வார். அவர் செய்யப் போவதை பொறுத்திருந்து பாருங்கள். லேவியரே, உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். தண்ணீருக்குள் இறங்குங்கள்."

**நான்கு ஆசாரியர்கள்:** (பெட்டியை தூக்கிக் கொண்டு கற்கள் இருக்கும் இடத்தை நோக்கி நகருங்கள்). "மேலே ஆற்றைப் பாருங்கள். தண்ணீர் குவியலாக நிற்கிறது." "(கற்களைத் தாண்டி ஆற்றைக் கடந்து போகவும்)."

**இஸ்ரவேலர்கள்:** (பலர்) (லேவியரைத் தொடர்ந்து ஆற்றைக் கடத்தல்) "பாருங்கள்! தரை காய்ந்திருக்கிறது." "காய்ந்த நிலம் வழியாக நாம் நடக்கலாம்."

**கல்சுமப்போரும் யோசுவாவும்:** (சிறுவர்களைத் தொடர்ந்து போதல் இப்போது கற்களை எடுக்க வேண்டாம்). "தேவன் ஆற்றை தடுத்து வைத்திருக்கிறார்" "இது ஓர் அதிசயம்", "தேவன் நமக்கு உதவுகிறார்."

**கதை கூறுபவர்:** யோசுவா 4:1-7 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். "இஸ்ரவேலின் 12 கோத்திரத் தலைவர்களிடமும் யோசுவா கூறுவதைக் கேளுங்கள்."

**யோசுவா:** எல்லோரும் கடந்தாயிற்று. இப்போது 12 பலசாலிகளை ஆற்றின் மத்தியில் இருந்து பெரிய கற்களைக் கொண்டு வருவதற்காகத் தேர்ந்து எடுங்கள். "இன்று கர்த்தர் செய்ததை நமது பிள்ளைகள் நினைவு கூர வசதியாய் இருக்கும்."

**கல்சுமப்போர்:** (கற்களை எடுத்து வருகின்றனர். கனமாக இருப்பது போல் பாவிக்கவும். ஆசாரியர்கள் நிற்கும் இடத்தில் குவித்து வைக்கவும்).

**இஸ்ரவேலர்கள்:** "இந்த கற்குவியலுக்கு அர்த்தம் என்ன?"

**யோசுவா:** "இன்று கர்த்தர் செய்ததற்கு நினைவுச் சின்னம்."

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்ததென்று கூறி, நாடகத்துக்கு உதவியவர்களுக்கு நன்றி கூறவும்.

தேவனுடைய கிரியைகளை ஞாபகம் வைத்துக் கொள்ளும் வேறு வழிகளைப் பற்றி விவாதிக்கவும். விசுவாசிகள் உதாரணம் தரட்டும்.

குழந்தைகளுக்கு வீட்டில் போதிப்பதால் வரும் ஆசீர்வாதம் பற்றி விசுவாசிகள் சாட்சி கூறலாம்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்ததை வழங்கலாம்.

லூக். 11:10-13 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆரம்பியுங்கள். தமது குழந்தைகளாகிய நமக்கு பரலோக தந்தை வழங்கும் ஒரு நல்ல வரமே கர்த்தரின் பந்தி என்பதை விவரியுங்கள்.

எபே. 6:4 ஐ **மனனம் செய்யவும்.**

**ஜெபிக்கவும்,** வீடுகளிலும் கூட்டத்திலும் குழந்தைகளுக்கு போதிக்கும் திட்டத்தை உறுதிப்படுத்தவும், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.